71. மின் உருகி என்பது ஒரு ______.

1. சாவி 2. அதிக உருகுநிலை கொண்ட ஒரு கம்பி

3. குறைந்த உருகுநிலை கொண்ட ஒரு கம்பி 4. குறுக்கு சுற்றை ஏற்படுத்த உதவும் சாதனம்

72. மின்தூக்கி, மின்சாரமணி, தொலைபேசி போன்ற கருவிகள் எதன் அடிப்படையில் செயல்படுகிறது?

1. மின்வெப்ப விளைவு 2. மின்காந்த விளைவு

3. மின்வேதி விளைவு 4. அனைத்தும்

73. மின்வேதி விளைவு எங்கு பயன்படுகிறது?

1. தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுப்பதில் 2. மின்முலாம் பூசுதல்

3. கவரிங் நகைகள் தயாரிப்பில் 4. அனைத்தும்

74. கூற்று: மின் உருகி மின்சாதனங்களில் பொருத்தப்படுகின்றன.

காரணம்: இது தானாகவே மின் சுற்றைத் துண்டித்து, பின்னர் மின்சாரத்தை தானாக மீட்டெடுக்கும்.

1. கூற்று சரி காரணம் தவறு 2. கூற்று காரணம் சரி

3. கூற்று காரணம் தவறு 4. கூற்று தவறு காரணம் சரி

75. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. மின்னோட்டத்தின் காந்த விளைவின் ஒரு பயன்பாடு மின் உருகி ஆகும்.

2. மின்னோட்டம் பாய்வது நிறுத்தப்பட்டால் கம்பிச் சுருளானது தனது காந்தத் தன்மையை இழக்காது

3. தொலைபேசிகளில் மின்னோட்டத்தின் வேதிவிளைவு பயன்படுகிறது

4. மின்னோட்டம் பாயும் திசையைப் பொறுத்து கம்பிச் சுருளின் இரு முனைகளிலும் மின்முனைகள் மாற்றமடையும்.

76. கம்பளத்தில் கால்களைத் தேய்த்துவிட்டு கதவின் கைப்பிடி அல்லது ஈரமான சுவரைத் தொடும்பொழுது மின்னதிர்ச்சி ஏற்படக் காரணமான நிகழ்வு ______.

1. மின்னிறக்கம் 2. மின்னேற்றம் 3. அயனியாக்கம் 4. மின்னாற் பகுத்தல்

77. பொருத்துக.

i. மின்னோட்டம் - A. 250 மில்லி ஆம்பியர்

ii. 1 மில்லி ஆம்பியர் (mA) - B. 2500000 மைக்ரோ ஆம்பியர்

LIVEWORKSHEETS

iii. 1 மைக்ரோ ஆம்பியர் (μA) - C. q / t

iv. 0.25 ஆம்பியர் - D. 1 / $10^3$ A

v. 2.5 ஆம்பியர் - E. 1 / $10^6$ A

(1) i. C ii. A iii. B iv. D v. E (2) i. C ii. D iii. E iv. A v. B

(3) i. C ii. A iii. E iv. B v. D (4) i. C ii. D iii. E iv. B v. A

78. ஒரு கடத்தியின் வழியே ஒரு விநாடியில், ஒரு குறிப்பிட்ட புள்ளியை, 10 அலகுகள் கொண்ட மின்னூட்டம் கடந்து செல்கிறது. எனில் அக்கடத்தியின் வழியே செல்லும் மின்னோட்டத்தின் அளவு யாது?

(1) 10 ஆம்பியர் (2) 1 ஆம்பியர் (3) 10 வோல்ட் (4) 1 வோல்ட்

79. 0.25 ஆம்பியர் (A) மின்னோட்டத்தை மில்லி ஆம்பியரில் (mA) கூறுக.

(1) 2.5 mA (2) 25 mA (3) 250 mA (4) 2500 mA

80. பொருத்துக.

i. மின்கலம் - A. மின்சுற்றை திறக்க அல்லது மூட பயன்படுகிறது.

ii. சாவி - B. பாதுகாப்பு சாதனம்

iii. மின்சுற்று - C. வேதி ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும்

iv. மின் உருகி - D. மின்னோட்டம் செல்லும் மூடிய பாதை

(1) i. A ii. B iii. C iv. D (2) i. B ii. D iii. C iv. A

(3) i. C ii. A iii. D iv. B (4) i. C ii. D iii. B iv. A

81. ஒப்புமைப்படுத்துக மில்லி ஆம்பியர் : $10^{-3}$ : : மைக்ரோ ஆம்பியர் : _______.

(1) $10^{-5}$ (2) $10^{-6}$ (3) $10^{-7}$ (4) $10^{-8}$

82. பொருத்துக.

i. இரு ஓரின மின்துகள்கள் - A. நேர் மின்னூட்டம்

ii. இரு வேறின மின்துகள்கள் - B. பாதுகாப்பு சாதனம்

iii. கண்ணாடித் துண்டை பட்டுத் துணியில் தேய்க்க - C. ஒன்றையொன்று விலக்கும்

iv. ரப்பர் தண்டை கம்பளியில் தேய்க்க - D. ஒன்றையொன்று கவரும்

v. மின் உருகி - E. எதிர் மின்னூட்டம்

(1) i. D ii. C iii. B iv. E v. A (2) i. C ii. D iii. A iv. E v. B

(3) i. C ii. A iii. E iv. B v. D (4) i. D ii. C iii. E iv. B v. A

83. கூற்று: மின்னலினால் பாதிக்கப்படும் மக்கள் கடுமையான மின்னதிர்ச்சியை உணர்வார்கள்.

காரணம்: மின்னல் அதிக மின்னழுத்ததைக் கொண்டிருக்கும்

LIVEWORKSHEETS

(1) கூற்று, காரணம் சரி. மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்.

(2) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

84. கூற்று: மின்னலின் போது உயரமான மரத்தின் அடியில் நிற்பது நல்லது.

காரணம்: அது உங்களை மின்னலுக்கான இலக்காக மாற்றும்.

(1) கூற்று, காரணம் சரி. மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்.

(2) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி


**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

85. மின்னியற்றியின் தத்துவம் ______. (NMMS-201(1)

(1) காந்தத் தூண்டல் (2) மின்காந்தத் தூண்டல்

(3) மின் தூண்டல் (4) மின்னோட்டத்தின் வெப்ப விளைவு

86. கீழ்காணும் மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவு ______. (NMMS-2011)




(1) 1.5 A

(2) 2.5 A

(3)B 0.5 A

(4) 0.33 A

87. கீழ்க்காண்பவற்றுள் மின் கடத்தாப் பொருள் எது? (NMMS-201(1)

(1) காப்பர் (2) நெகிழி (3) மெர்குரி (4) இரும்பு

88. மின் கடத்தாப் பொருளுக்கு எடுத்துக்காட்டு ______. [NMMS-2012]

(1) குளத்து நீர் (2) கடல் நீர் (3) வாலை வடிநீர் (4) கிணற்று நீர்

89. சரியான பொருத்தம். [NMMS-2012]

| <u>மின்பூச்சின் பெயர்</u> | | <u>பயன்பாடு</u> |
|---|---|---|
| (i) குரோமியம் உலோகத்தால் மின்பூச்சு | - | (A) தானியங்கிகள் |
| (ii) வெள்ளீயத்தாலான மின்பூச்சு | - | (B) கைக்கடிகாரம் |
| (iii) தங்க முலாம் | - | (C) குளியலறை குழாய்கள் |
| (iv) நிக்கல் முலாம் | - | (D) சாப்பாட்டு மேசையில் பயன்படும் பொருட்கள் |

(1) (i) - (C) (ii) - (D) (iii) - (B) (iv) - (A) (2) (i) - (A) (ii) - (B) (iii) - (D) (iv) - (C)

LIVEWORKSHEETS

(3) (i) - (B) (ii) - (D) (iii) - (A) (iv) - (C) (4) (i) - (A) (ii) - (C) (iii) - (D) (iv) - (B)

90. பொருட்கள் மின்னூட்டம் பெறும்போது ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு மாற்றப்படும் துகள் _______. [NMMS-2012]

(1) எலக்ட்ரான்கள் (2) புரோட்டான்கள் (3) நியூட்ரான்கள் (4) அணுக்கள்

91. மின்னல் தாங்கியை கண்டுபிடித்தவர் _______.[NMMS-2012] மற்றும் (NMMS -2015)

(1) பெஞ்சமின் ப்ராங்க்ளின் (2) ஜேம்ஸ் வாட்

(3) ஜார்ஜ் சைமன் ஓம் (4) மைக்கேல் பாரடே

92. மின் சுற்றில் செல்லும் மின்னோட்டத்தைக் கண்டறியப் பயன்படும் கருவி _____ [NMMS-2014]

(1) ஓடோமீட்டர் (2) கால்வனா மீட்டர் (3) வோல்ட் மீட்டர் (4) அம்மீட்டர்

93. வீடுகளில் இணைக்கப்படும் மின்சுற்று _______. (NMMS 2015 - 2016)

(1) எளிய மின்சுற்று (2) பக்க இணைப்பு சுற்று

(3) தொடர் இணைப்பு சுற்று (4) ஏதுமில்லை

94. மின்கலத்தில் நடைபெறும் ஆற்றல் மாற்றம் _______. (NMMS 2015 - 2016)

(1) மின்னாற்றல் வேதியாற்றலாக மாற்றப்படுகிறது

(2) வேதியாற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது

(3) வெப்ப ஆற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது

(4) ஒளியாற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது

95. மின் நடுநிலையில் உள்ள ஒரு பொருளை மின்னூட்டம் பெற்ற ஒரு பொருளினால் தொடாமலேயே மின்னூட்டமடையச் செய்யும் முறை [NMMS-2016]

(1) உராய்வின் மூலம் மின்னோட்டம் பெறுதல்.

(2) கடத்தல் மூலம் மின்னோட்டம் அடையச் செய்தல்.

(3) தூண்டுதல் மூலம் மின்னோட்டம் அடையச் செய்தல்.

(4) காந்தத்தின் மூலம் மின்னோட்டம் அடையச் செய்தல்.


96. பொருந்தாததைக் கண்டுபிடிக்கவும் (NMMS EXAM 2015 - 2016)


(1) ரொட்டி சுடும் மின் அடுப்பு (2) மின் தேய்ப்பு பெட்டி


(3) மின் விளக்கு (4) அறை வெப்ப மூட்டி


97. இரண்டு மின்கலம், இரண்டு மின்பல்புகள் மற்றும் சாவி இவை தொடர் இணைப்பில் இணைக்கப்படும் போது அதற்கான மின்சுற்றினை கீழ்க்குறிப்பிட்டுள்ள படங்களிலிருந்து தேர்ந்தெடுக்கவும். [NMMS-2016]

LIVEWORKSHEETS

(1) 

(2) 

(3) 

(4) 

98. கீழ்காணும் கூற்று / கூற்றுகளில் சரியானவற்றைக் கண்டுபிடிக்கவும். (NMMS 2018)

முதன்மை மின்கலங்கள் _______.

(i) மின்னேற்றம் செய்ய இயலாதவை

(ii) மீண்டும் பயன்படுத்த முடியாதவை

(iii) மின்னேற்றம் செய்யவோ மீண்டும் பயன்படுத்தவோ முடியாதவை

(1) (i) மட்டும் சரி (2) (ii) மட்டும் சரி (3) (i), (ii) தவறு (4) (iii) சரி

99. ஒளி உமிழ் டையோடு என்பது _______ பொருள்களால் செய்யப்பட்டது. (NMMS 2018)

(1) மின்கடத்தும் (2) குறைகடத்தி (3) மின்கடத்தா (4) இவை அனைத்தும்

100. நாக முலாம் பூசுதல் என்பது _______ ஆகும். (NMMS 2018)

(1) குரோமியத்தை இரும்பின் மீது பூசுதல். (2) இரும்பின் மீது துத்தநாகத்தைப் பூசுதல்.

(3) வெள்ளிய உலோகத்தை இரும்பின் மீது பூசுதல் (4) வண்ணப்பூச்சு பூசுதல்

101. கீழ்க்கண்ட குறியீடு குறிப்பது (NMMS 2019-2020)



(1) மின்கலம் (2) தொடுசாவி

(3) மின்கல அடுக்கு (4) இணைப்புக் கம்பி

102. பொருத்துக. (NMMS 2019-2020)

(1) வெப்ப குடுவை - i. வில்லியம் கில்பர்ட்

(2) கலோரி மீட்டர் - ii. சர் ஜேம்ஸ் திவார்

(3) நிலை மின்காட்டி - iii. ஆப்ரஹாம் பென்னட்

(4) தங்க இலை நிலைமின்காட்டி - iv. பியரே சைமன் லாப்லாஸ்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| (1) | ii | iv | i | iii |
| (2) | ii | i | iii | iv |
| (3) | i | iii | iv | ii |
| (4) | iii | ii | iv | i |

LIVEWORKSHEETS

103. சிம்கார்டுகளில் பயன்படுத்தப்படும் சிப்புகள் சிலிக்கான் மற்றும் ஜெர்மானியத்தால் ஆனவை. ஏனெனில் அவற்றின் _______ நற்கடத்திகள் மற்றும் காப்பான்களுக்கு இடையில் அமைந்திருக்கும் (NMMS - 2020 - 21)

(1) காந்தத் தூண்டல் (2) மின்னோட்டம் (3) மின்கடத்துத்திறன் (4) மின்தடை

104. செயற்கை இழையால் ஆன ஒரு துண்டுத் துணியில் ஒரு காற்று நிரப்பப்பட்ட பலூனை தேய்த்து அதை ஒரு சுவற்றில் வைத்து அழுத்தினால், அந்த பலூனானது சுவற்றுடன் ஒட்டிக் கொள்வதை காணலாம். இதற்கு காரணமான விசை (NMMS 2018)

(1) காந்தவிசை (2) தொடு விசை

(3) சுவற்றிற்கும், பலூனிற்கும் இடையே உள்ள அழுத்தம்

(4) நிலை மின்னியல் விசை

LIVEWORKSHEETS